JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI**

| | | | |
|---|---|---|---|
| Calendar | | **C.C.No.** | **39/2020** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 8** | Prosecution /Defence / Court | |
| Name | சாந்தமூர்த்தி (DSP) | Village | திருப்பத்தூர் |
| Father's Name | குப்புசாமி | Taluk | |
| | | Age | |

## Accused present

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 26.02.2026.**

இந்த சாட்சி விசாரணை குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 275ன்படியும், குற்றவியல் நடைமுறை விதிகள் 2019 விதி 51 படியும் மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்ற காணொலி காட்சி விதிகள் 2020ன் படியும் காணொலி காட்சி மூலம் பதிவு செய்யப்படுகிறது. காணொலி காட்சியின் நீதிமன்ற முனையில் மாண்புமிகு குற்றவியல் நீதிபதியும், நீதிமன்ற ஊழியர்களும் ஒருங்கிணைப்பாளராக திருமதி.சி.மௌனேஸ்வரி, Data entry operator என்பவரும் மற்றொரு முனையில் வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ள திரு. சாந்தமூர்த்தி திருப்பத்தூர் நீதிமன்ற அலுவலகத்தில் உள்ள ஒருங்கிணைப்பாளர் திரு. பார்த்தசாரதி இருந்து சாட்சி முனை ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். மற்றொரு முனையில் எதிரியும் கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் திரு. S. நேசமணி, அவர்களும் தயாராக உள்ளனர். சாட்சியம் அளிக்க வந்துள்ளதை அடையாள அட்டை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, எதிரி தரப்பிற்கும் அனுப்பி வைக்கப்பட்டு சரிபார்க்கப்பட்டது. இரு தரப்பினரின் சம்மதத்தின் பேரில் சாட்சி விசாரணை காணொலி காட்சி மூலம் பதிவு செய்யப்படுகிறது.

## முதல் விசாரணை

1. நான் தற்போது திருப்பத்தூர் மாவட்டத்தில் DSP ஆக 08.08.2025 ம் தேதி முதல் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.01.2019 ம் தேதி அன்று ஈரோடு மாவட்ட கவுந்தப்பாடி வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது கவுந்தப்பாடி காவல் நிலையத்திற்குட்பட்ட திங்களூர் காவல் நிலைய குற்ற எண். 13/2019 சட்டபிரிவு 279, 337 இ.த.ச. பிரிவின் படி வழக்கு பதிவு செய்ததை வழக்கில் விபத்தில் காயம் பட்ட அம்மாசை இறந்து விட்டதால் வழக்கின் சட்டப்பிரிவை 279, 337 இதச வில் இருந்து 279, 304 A ஆக மாறுதல் செய்து முதல் கட்ட புலன் விசாரணை செய்து மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பினை ஒப்படைத்ததை நான் என் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சாட்சிகள் முதல் கட்ட புலன் விசாரணை அதிகாரியிடம் சொன்னது போலவே என்னிடமும் சொன்னதால் நான் மறுவாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. 05.02.2019 ம் தேதியன்று மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. கண்ணன் அவர்களை விசாரித்து ஆய்வறிக்கை பெற்றேன். **எதிரி ஓட்டி வந்த TN 56 F 0852 பஜாஜ் டிஸ்கவர் இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. 19.02.2019 ம் தேதி ஈரோடு அரசு மருத்துவமனை அரசு மருத்துவர் ஜெயகவி, தலைமை காவலர் கதிரவன், SI பழனிச்சாமி ஆகியோர்களை விசாரித்தும், அவர்களது வாக்குமூலத்தை பதிவு செய்தேன். **சடல கூறாய்வு அறிக்கை அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்து பதிவேடு அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் என் புலன் விசாரணையை முடித்து 19.02.2019 ம் தேதியன்று எதிரி மீது இ.த.ச.பிரிவு 279, 304Aன்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. புகாரில் உள்ள கையெழுத்தும், முதல் தகவல் அறிக்கையில் புகாரை கொடுத்ததற்கான கையெழுத்தும் மாறுபட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த விபத்து சம்பந்தமாக பூபதி புகார் கொடுத்தாரா அல்லது வீராசாமி கொடுத்தாரா என்றால் பூபதி தான் கொடுத்தார். புகாரை யார் எழுதியது என்று நான் விசாரிக்கவில்லை. 11.01.2019 ம்

தேதி பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கை 18.01.2019 ம் தேதி தான் நீதிமன்றத்தில் பெறப்பட்டது என்றால் சரிதான். வழக்கு கோப்பு என்னுடைய புலன் விசாரணைக்கு எப்போது என்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் 05.02.2019 ம் தேதி காலை 10.00 மணிக்கு ஒப்படைக்கப்பட்டது. ஒரு வழக்கானது உதவி ஆய்வாளர் விசாரணை மேற்கொள்ள கூடாது என்றால் சரியல்ல.

2. நான் வட்ட காவல் ஆய்வளாளராக இருந்ததால் முக்கியமான வேறு வழக்குகள் இருந்ததால் உதவி ஆய்வாளரை விசாரிக்க சொல்லலாம். இறுதி அறிக்கையில் மேற்படி விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய மேற்பார்வையில் தான் உதவி ஆய்வாளர் விசாரணை மேற்கொண்டார் என்ற விவரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 பூபதி என்னுடைய விசாரணையில் எனக்கு பின்னால் என் அப்பா நடந்து வந்தார் என்றும் நான் போய் பார்த்தேன் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி வீராசாமி ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு 5 பேர் அழைத்துச் சென்றோம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. சம்பவ இடம் தார் ரோட்டின் மையப்பகுதியின் அருகில் என்றால் சரியல்ல. விபத்தானது தார் ரோட்டிற்கும் மையக்கோட்டிற்கும் இடையில் நடந்ததா என்றால் இல்லை சாலையின் இடது ஓரத்தில் நடந்தது. பொதுவாக பாதசாரிகள் மண்பாதையில் தான் நடந்து செல்ல வேண்டும என்றால் அதிகமான பாதசாரிகள் நடந்து சென்றதால் ரோட்டிலும், மண்பாதையிலும் நடந்து சென்றுள்ளார்கள். வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பாதசாரிகள் எத்தனை பேர் சென்றார்கள் என்று என்னுடைய விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தற்சமயம் நினைவில்லை. நான் சொல்வது போல் விபத்து நடைறெவில்லை என்றும், நடந்து சென்றவர் குறுக்காக சென்று விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்தில் சாலை பழுது பார்க்கும் பணிகள் நடந்தாக தெரிந்து கொண்டேன் என்றால் ஆமாம். வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் விசாரித்த 1 முதல் 7 வரை உள்ள சாட்சிகளை எந்த இடத்தில் வைத்து நான் மறுவிசாரணை செய்தேன் என்றால் அவர்கள் இருக்கும் இடத்தில் வைத்து விசாரித்தேன்.

4. நான் மறுவிசாரணை செய்யவில்லை அதனால் தான் மறுவாக்குமூலம் பதிவு செய்யவிலலை என்றால் சரியல்ல. காலதாமதமாக மோட்டார் வாகன ஆய்வறிக்கைக்கு வாகனம் அனுப்பி வைக்கப்பட்டது என்றால் ஆவணங்கள் சரியாக கிடைக்காததால் காலதாமதமாக அனுப்பி வைக்கப்பட்டது. விபத்து பதிவேட்டில் காவல் துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது இறந்தவர் மீது தவறு இருப்பதால் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் விசாரித்தத சாட்சிகள் அனைவரும் இறந்தவருக்கு உறவினர்கள் என்றால் சரியல்ல. சம்பவ இட சாட்சிகளை நான் விசாரிக்கவில்லை என்றல் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில்புகார் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவிலலை என்றும், சொன்ன நேரத்தில் நான் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றும் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறுதலாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**

காணொலி காட்சி மூலம் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சர் மூலம் தட்டச்சு செய்யப்பட்டு பிழைகள் திருத்தப்பட்டு, சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு, சாட்சி சரியாக உள்ளதாக ஒப்புக் கொண்டார். மேற்படி சாட்சியத்தின் நகல் மின்னனு பதிவு மூலம் சாட்சியம் அளித்தவரின் மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி சாட்சியத்தின் மின்னனு பதிவை பதிவிறக்கம் செய்து, அதில் சாட்சி கையொப்பமிட்டு, ஒருங்கிணைப்பாளர் சான்றொப்பமிட்டு அதை ஸ்கேன் செய்து நீதிமன்ற மின் அஞ்சல் முகவரிக்கு உடனடியாக அனுப்பி வைக்க உத்திரவிடப்படுகிறது. மேற்படி சாட்சி கையொப்பமிட்ட அசல் பதிவை இந்நீதிமன்றத்திற்கு 3 நாட்களுக்குள் பதிவு தபால் மூலம் அனுப்பி வைக்க உத்திரவிடப்படுகிறது. மேற்படி காணொலி காட்சி மூலம் பதிவு செய்யப்பட்ட மேற்படி

**சாட்சியத்தின் பதிவு பாதுகாப்பாக வைக்க உத்திரவிடப்படுகிறது.**

**ஒருங்கிணைப்பாளர்** **சாட்சியின் கையொப்பம்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை